"வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௬. } ஆனந்த௵ புரட்டாசி௴ { பகுதி ௬.

* முத்து.

"மரகதம் பவளம் நீலம் வச்சிரம் பதும ராகம்
விரவிய தரள மேகோ மேதகம் புருட ராகம்
உரவிய காந்தி விட்டே உமிழும்வை டூரி யந்தான்
பெருகிய நவம ணிக்குப் பெயரிவை ஆகு மென்ப"

இவற்றுள் "தரள" மென்பதே முத்து. தரளம், மௌத்திகம், நாவி, திரட்சி, மணி, முத்தாபலம், ஆரம், நித்திலம், முத்தம் இவை முத்தின் மறு பெயர்களாம். நிற்க.

"பார்த்திபர் மதிக்கும் முத்தம்" என நம்முடைய பரதகண்டத்துப் பண்டைக்காலப் பனுவலோர்களால் பாராட்டிக் கூறப்படும் இம்முத்தானது, நவரத்நங்களுள் ஒன்றாயினும் பவளம் ஒழிந்த பிறமணிகளைப்போல் சுரங்கங்களினின்றும் வெட்டி எடுக்கப்படும் கல்லாகமாட்டாது. அது கடினமும் பளபளப்பும் வெண்ணிறமும் சாதாரணமாய் உருள் வடிவமும் வாய்ந்ததோர் ரத்நம். இது பெரும்பாலும் கடல்படு திரவியமாகுமென்பது,

"திரைக்கடற் படுவ வுப்பு செய்யவெண் பவளம் வெண்முத்
துரைத்தெழும் சங்கொக் கோலை இவ்வைந்து மென்ன லாமே"

என்பதா னுணரலாகும்.

---

* மேலைச்சிவபுரிச சன்மார்க்கச் சபையின் ஐந்தாம் வருஷோத்சவத்திற் படிக்கப் பெற்றது.

2. முத்துப்பிறக்கு மிடங்கள்.

பரஞ்சோதி முனிவர், "முத்து *'தலசம்' என்றும், † 'சலசம்' என்றும் இருவகையாகி, சங்கு, மேகம், மூங்கில், பாம்பின் றலை, பன்றிக்கொம்பு, வெண்ணெல், இப்பி, மீன்றலை, கரும்பு, யானைக் கொம்பு, சிங்கத்தின் புஜம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து ஆகிய பதின்மூன்று இடங்களினின்றும் பிறக்கிறதென் றும், இவற்றுள் கடைசியிற் கூறிய மூன்று இடங்களினின்றும் பிற க்கும் முத்துகள் கிடைப்பது அருமை என்றும் பின்வருமாறு கூறுகிறார்.

"தக்கமுத் திரண்டு வேறு தலசமே சலச மென்ன
இக்கதிர் முத்தம் தோன்றும் இடம்பதின் மூன்று சங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிக் கோடு
மிக்கவெண் சாலி இப்பி மீன்தலை வேழக் கன்னல்"

கரிமருப் ‡பைவாய் மானின்கை கற்புடை மடவார் கண்டம்,
இருசிறைக் கொக்கின் கண்டம் என; கடைக்கிடந்த மூன்றும்
அரியன. திருவிளையாடற்புராணம்.

இப்பரஞ்சோதி முனிவருக்கு முன்னிருந்த திருவாலவாயுடை யார் திருவிளையாடற் புராண நூலுடையாராகிய செல்வி நகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியவரும் "முத்தின் பிறப்பிடம் பதின் மூன்றென

§ " தண்தாளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பில்
சங்கினில்மீ னின்தலையிற் றழைசெற்றாளில்
ஒண்டொடிமங் கையர்க ளத்தில் யானைக் கோட்டில்
உயர்கழைபில் காகவா கனர்திண் தோளில்
கொண்டலில் இப் பியிலஏனக் கொம்பில் இக்கில்
கொக்கிலெனப் பகர்வர்வியப் பிப்பி முத்தால்"
என்னும் செய்யுள் மூலமாக அறிவிக்கின்றார்.

ஆனால் இப்பாட்டில் ஐவாய் "மான்கை" என்பதற்குப் பதிலாக காகவாகனர் (சனீசுரன்) திண்தோள் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை சொல்லியவற்றால் முத்தின் பிறப்பிடம் பதி னான்கு என அறியலாகும்.

---

* தலசம் (ஸ்தலஜம்) நிலத்திற் பிறப்பது. † சலசம் (ஜலஜம்) நீரிற் பிறப்பது. ‡ ஐவாய்மான்-- சிங்கம் அல்லது யாளி. § மாணிக்கம் விற்ற திருவிளையாடல் 1௯-செய்யுள்.

இவற்றுள் மேகத்தின் முத்து இளஞ் சூரியன் நிறமும்; மூங்கில் முத்து மழைத்துளி நிறமும், பாம்பின் முத்து நீல நிறமும், பன்றிக்கொம்பின் முத்து இரத்த நிறமும், நெல்லின் முத்து பச்சை நிறமும் மீனின் முத்து பாதிரிப்பூ நிறமும், சிப்பிமுத்து பளபளப்புடன்கூடிய வெண்ணிறமும் கொண்டதாம். நிற்க.

முற்கூறிய பதின்கு இடங்களைத்தவிர மற்றும் கமுகு, வாழை, நத்தை, தாமரை, பசுவின் பல், சந்திரன், உடும்பு, முதலை என்னும் எட்டு இடங்களிலும் முத்து உண்டாகும் என்பதை

> தந்தி வராக மருப்பிப்பி *பூகம் தழை†கதலி
> ‡நந்து சலஞ்சலம் மீன்றலை கொக்கு §நளினமின்னார்
> கந்தரஞ் சாலி கழைகன்னல் ஆவின்பல் கட்செவிகார்
> ||இந்து உடும்பு ¶கராமுத்த மீனு மிருபதுமே.

> பனிமதி கதலி மேகம் பைந்தொடி கழுத்தா வின்பல்
> தனி பானை ஏனக் கொம்பு தடங்கரா உடும்பு கொக்கு
> வினையராச் சலஞ்ச லம்நந் திப்பிமீன் மூங்கில் பூகம்
> நினைசெந்நெல் கரும்பு கஞ்சம் நிகழ்இரு பதின்முத் தாகும்.

என்னும் தனிப்பாடல்களால் அறிக.

ஆகவே, இருபத்திரண்டு இடங்களிலும் முத்து உற்பத்தியாகும் எனத் தமிழ் நூலாசிரியர்கள் கூறிய விஷயம் இப்போது நன்கறிந்தோம். ஆயினும் தற்காலம் விவசாய இலாகா பரிசோதகராகிய ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் தென்னையிலும் முத்து இருக்கும் விஷயம் தெரிவிக்கின்றார். ஆகவே முத்தின் பிறப்பிடம் இதுகாறும் கூறியவற்றால் இருபத்துமூன்றாகும்.

3. இப்பியில் முத்துண்டாகும் விதம்.

இப்பியினின்று முத்து எடுக்கப்படுவதே பண்டிதர் பாமரர்பலரும் கேள்வி மூலமாகவும் நேரிலும் அறிந்த விஷயமாதலின் இப்பி முத்தைப் பற்றியே இப்பொழுது சிறிது கூறுவாம்.

"இப்பி" என்பது முத்துச்சிப்பி என்று சொல்லப்படும் ஒருவகை ஜலசரம். இவ்விப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான

---

* பூகம் - கமுகு, பாக்குமரம். † கதலி - வாழை. ‡ நந்து - நத்தை.
§ நளினம் - தாமரை. || இந்து - சந்திரன். ¶ கரா - முதலை.

தோல் இருக்கும். இத்தோலைச் சுற்றி இருமருங்கினும் கடினமான ஓடுகள் கவிந்திருக்கும். சிப்பிகளின் மிருதுவான மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டிற்கும் இடையே ஒருவகைப் பொடி மணல் புகுந்து அவற்றை உபத்திரவப்படுத்தும். படுத்தவே அவை எரிச்சல் பொறுது அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணும்புத் தன்மையுள்ள ஓர் வகை நீர் வெளிப்பட்டு முற்கூறிய நுண்மணலைக் கவிந்துகொள்ள அதுவே முத்தாகும் என்பர். இம்மர்மத்தைச் சீனர்களே முதன்முதலில் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாக் காலங்களிற்கூட அவர்கள் இப்பிகளைப் பிடித்து மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்குமிடையே புகுத்தி அவற்றிற்கு எரிச்சல் உண்டாக்கி முத்தினைச்செய்து பெருத்த லாபம் அடைந்து வருகிறார்களென்றும் தெரியவருகிறது.

சிப்பிகளின் சரீரத்தினின்றும் அவற்றின் முட்டைகள் வெளிப்படாத காலத்து அம்முட்டைகளும் மேலே சொன்ன பொசிநீரால் மூடப்பட்டு முத்தாக மாறுவதுண்டு.

ஆனால் பர்த்ருஹரிபோன்ற வடநூற் புலவர்கள் மழைத்துளி பெற எதிர்பார்த்த வண்ணமாகச் சிப்பியானது நீர் மட்டத்திற்கு மேலே வந்து தன் அகட்டைத் திறந்துகொண்டிருக்குமென்றும் மழைத்துளி ஒன்று அதனுள் விழுந்தவுடன் அது ஓட்டை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிடுமென்றும் அவ்வானத்துளியே பிறகு வண்முத்தாகிறதென்றும் கூறுகிறார்கள். சுவாதிநக்ஷத்திரம் உச்சத்தில் இருக்கும் காலை சிப்பி அகட்டில் விழும் விசும்பின் துளியே மிக விலையேறப்பெற்ற முத்து ஆம்.

4. இப்பிகள் இருக்கும் இடங்கள்.

வெண்முத்தினும் இப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார் குடாவிலும், மறிச்சுக்கட்டியை யடுத்த கடலிலும், இந்தியாவில் தூற்றுக்குடிக் கருகிலும், பாம்பன் கடலோரத்திலும், பாரஸீக குடாக்கடலிலும், போர்னியோவுக்கடுத்த ஐ-ஒது தீவுகளிலும் கருமுத்தின்பண மெக்ஸிகோவிலும் உள்ளன.

5—முத்துக் குளித்தல்.

முத்துப் பெறவேண்டிக் கடலின் கீழ் இருக்கும் முத்துச்சிப்பிகளை மூழ்கி எடுத்து மேலே கொண்டுவருவதற்கு முத்துக்குளிப்பு என்று பெயர். கடலில் அதிக ஆழத்திலுள்ள பாறைகளில் கூட்டங் கூட்டமாகத் தொத்திக்கொண்டிருக்கும் சிப்பிகளைப் பெற்று முத்தெடுக்கும் விதம் இலங்கை முத்துச்சலாப விஷயங்களைக்கொண்டு ஒருவாறு அறியலாகும். அவ்விஷயம் வருமாறு:—

இலங்கையில் முத்துச்சலாபம் பிப்ரவரிமீ தொடங்கி ஏப்ரல்மீ ஆரம்பத்திறகுள் முடிவுறும். முத்துக்குளிப்போர் பெரும்பாலும் இந்தியர்களும் சிங்களவர்களுமே. இவர்கள் இளம்பிராயமுதற்கொண்டே நெடுநேரம் தண்ணீருக்குள் நிற்கவும் நீந்தவும் நன்றாய்ப் பழகியவர்கள். ஆயினும் இவர்கள் பிழைப்பு என்றும் அபாயகரமானதே. ஏனெனில் கொம்பன் சுறாவினாலும் ஏனைய நீர்வாழும் பிராணிகளாலும் கடற் பூண்டுகள் சிக்கிக்கொள்வதனாலும் இவர்களுக்கு மரணம் நேருவதுண்டு. ஆதலின் இன்னோர் தாம் மூழ்குவதற்கு முன் சுறாவாயைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களென த்தாம் கருதிய மலையாளத்து மாந்திரீகர்களை அழைத்து அவர்களிடம் ஆருடம் கேட்டபின்பே மூழ்கத் தொடங்குவார்கள். மந்திரவாதிகளின் வார்த்தையில் குளிகாரர்களுக்குத் தேவதா விசுவாசம். இம்மாந்திரீகர்கள் அந்தந்த ஜாதியாருக்குத் தக்கபடி சடங்காசாரங்கள் ஏற்படுத்தித் தாமும் சுறாக்களை அப்புறப்படுத்த ஓர் வகை விரதம் அனுஷ்டிப்பார்கள். விரதத்தை மாந்திரீகனும் அனுஷ்டித்த விவரம் அறிந்தாலொழிய அவர்கள் மூழ்குவதற்கு முன்வரார்களாம். முத்தெடுக்கச்சென்ற படகுகள் திரும்பும் வரை மாந்திரீகன் மந்திரம் ஜெபித்துக்கொண்டு உபவாசத்துடன் இருப்பான். சிலவேளைகளில் மந்திரவாதியும் படகேறிச் செல்வதுண்டு. இவன் மட்டும் தம்முடன் வருவானாயின் தம் காரியம் இலாபகரமாயும் இடையூறின்றியும் இனிது நிறைவேறு மென்பது குளிகாரர்களின் கொள்கை. மாந்திரீகர் குளிகாரர்களிடத்து மட்டுமேயன்றி வியாபாரிகளிடத்திருந்தும் மிகலாபம் பெறுகின்றனர். நிற்க.

"சாஸ்திராய சகுகாபீக" என்றபடி குளிகாரர்களுக்கு மந்திரவாதிகள் அனுஷ்டிக்குமாறு கூறுவன யாவும் ஒருவிதமாகப்பார்க்

கில் நன்மைக் கேதுவான காரியங்களாகவே இருக்கின்றன. எங்ஙனமெனில், குளிகாரன், முழுகு முன்னே உபவாசத்துடனிருந்து முழுகும்போது மந்திரித்துத்தந்த விளக்கெண்ணெயைப் பூசிக்கொண்டு கடலில் இறங்கவேண்டுமென விதிக்கப்படுகிறான். வயிறு ஆகாரத்தால் நிரம்பி இருப்பின், வாந்தி முதலிய உபத்ரவம் உண்டாவதுடன் சுலபமாகக் குளித்தெழும்பவும் கூடாமற்போகுமன்றோ? அன்றியும் பசபசவென்று உவர்நீர் பட்ட மாத்திரத்தில் தேகம் அரிப்பெடாதிருத்தற்கு விளக்கெண்ணெய்ப் பூச்சும் வேண்டியதுதானே? நிற்க.

குளிகாரர்கள் கரைக்கு 8 மைல் தூரம் வரை படகுகளிற் கூட்டங்கூட்டமாகச் செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர இருபது பேர்கள் இருப்பார்கள்.

இவ்விருபது பேர்களிற் பத்துமனிதர்கள் படகு ஓட்டவும் முழுகுவோரைக் குறித்த காலத்தில் தூக்கி எடுக்கவும் நியமிக்கப்பட்டவர்கள். எஞ்சிய பத்துப்பேர்களும் குளிகாரர்களே. இவர்கள் ஐவர் ஐவராக மாறிமாறி வேலைசெய்வர். முழுகுவோர் முன் கூறியபடி எண்ணெய்ப்பூச்சுடையவராயும் கோவணமட்டுந் தரித்தவராயும் இறங்குவார்கள். இவர்கள் தாம் எளிதில் இறங்கிச்செல்வதற்கு உதவியாக சுமார் 50 ராத்தலுள்ள பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு படகிலும் இவ்வாறு ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இவை அடிபரந்தும் நுனிகுவிந்தும் கயிறுகள் கோக்கத் துவாரங்கொண்டும் இருக்கும். பிறைச்சந்திரன் போற் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகப்படுவதுண்டு. முழுகும்பொழுது குளிகாரன் கல்லிற் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலினாற் பிடித்துக்கொண்டு, இடதுகால் விரலால் தான் எடுக்கப்புகும் சிப்பிகளைப் போட்டுக்கொள்ள ஒருவகை வலையை இறுகப் பிடித்துக்கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும் கற்கயிற்றையும் தனது வலது கையாற் பற்றிக்கொண்டும், காதில் மெழுகு திணித்துக்கொண்டும் நாசித்துவாரங்களை இடதுகை விரல்களால் இறுக அடைத்துக்கொண்டும் தண்ணீருக்குள் சில சமயம் 100 அடிஆழம் வரை கூட மூழ்குவான். மூழ்கி

அடியிற்சென்றதும் காலில் மாட்டிய வலையை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு விரைவாகவும் சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக்கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப்போடுவான், அவன் தடவைக்கு 100 சிப்பிகளுக்குக் குறையாமல் அள்ளுவானும். நீரில் அவன் அமிழ்ந்து நிற்பதெல்லாம் 120 விநாடி (Seconds) இருக்கும். மூன்றல்லது நான்கு நிமிஷத்திற்கதிகம் எவனாலும் நீரில் மூழ்கி இருக்கமுடியாது. மூச்சுத்திணறும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின்மேல் மீண்டும் ஏறிக்கொள்ளாமல் கீழே நின்றபடியே வலதுகைக் குயிலுகளை மட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்பைப் படகோட்டிகள் அறிந்து படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய்க் கல்லில் கட்டப்படாதிருக்கும் கயிற்றை இழுத்து அவனை மேலே தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள், பிறகு அவன் விட்டு வந்த கல்லை அதன் கயிற்றால் மேலே இழுத்துக்கொள்வார்கள்.

முத்துக்குளிக்கச் செல்வோர் சூரியன் உதிக்குமுன் முத்திருக்கும் பாறைபோய்ச் சேர்ந்து கடல் நீர் வெதுவெதுப்புடன் இருக்கும் நேரமாகிய சுமார் 7 மணிக்கு மூழ்கத்தொடங்கி சுமார் 12 மணிக்குக் கரைசேரப் படகேறுவார்கள். 12 மணிக்குப் பிறகு அவர்கள் குளிப்பதில்லை. நாள் ஒன்றுக்கு அவர்கள் 40 அல்லது 50 தடவை மூழ்குவார்கள். திரும்புகையில், படகு, கரையிலுள்ளோர் கண்ணுக்குத் தென்படும் தூரத்திலிருந்து குண்டு போடப்படும். இது படகு சாவதானமாகத் திரும்பிவந்த சுபசமாச்சாரத்தை அதன் சொந்தக்காரர் அறிவதற்கான அடையாளமாம். படகுகள் கரை சேர்ந்ததும் அதில் உள்ளனயாவும் சூரியன் அஸ்தமிக்கும் முன் கீழே இறக்கப்படும். நிற்க.

மூழ்கும் பொழுது விலையுயர்ந்த முத்துக்கள் அகப்பட்டால் குளிகாரர்கள் அவற்றை விழுங்கிப்பிறகு வெளிப்படுத்தி விற்று மிக்கலாபம் பெறக்கூடுமாதலின் இவர்களைக் கூலிக்கு அமர்த்துவோர் இவர்களுக்குப் பேதிமருந்து கொடுத்து நன்றாய்ப் பரிசோதித்து முத்துக்கள் இருப்பின் பிடுங்கிக்கொண்டு விடுவார்கள். பிறகு

குளிகாரர்கள் தம் கூலிபாகச் சிப்பிகளில் நான்கில் ஒரு பங்கேனும் தக்க பொருளேனும் பெறுவர். பின்னர் எஞ்சிய சிப்பிகள் ஆயிர மாயிரமாகவும் ஏலத்தில் மிகுந்த தொகைக்கு கேட்போர்க்கு விற்க ப்படும்.

சிப்பிகள் சொந்தக்காரர்களால் இரண்டு அடி ஆழமுள்ள குழி களிலாயினும், வேலிசூழ்ந்த சதுப்பு நிலங்களிலாயினும் மணல் சிறி தும் படாதபடி பாய்களின்மேல் கொட்டிவைக்கப்படும். அங்கிரு ந்தபடியே அவை நன்றாய் அழுகி உலர்ந்து சாகும். உலர்ந்த பின் னரே அவற்றினின்றும் முத்துகளைச் சேதமின்றி எடுக்கக்கூடும். அவை உயிருடன் இருக்கும்பொழுதேனும் அழுகி உலருமுன்பே னும் திறக்கப்பட்டால் முத்துக்குச் சேதம் மிகுதியும் உண்டாகும். ஏனெனில் உயிருடன் இருக்குங்கால் சிப்பிகளை எளிதில் உடைக்க முடியாது. சுத்தியல் கொண்டு உடைத்தாலோ முத்துத் தெறித் துப்போம். நிற்க.

சிப்பிகள் நன்றாக அழுகுங்கால் எழும் துர்நாற்றம் சகிக்கத் தரமன்று. ஆயினும் அவற்றினின்றும் எதிர்பார்க்கும் இலாபமே இந்நாற்றத்தை ஒரு சிறிதும் பாராட்டாமல் சந்தோஷமாகவே சகிக்கச்செய்து கருமத்தில் கண்ணுயிருக்கச் செய்து விடுகிறது. நீரில் சிப்பிகளை வேகவைத்தும் முத்துப்பெறுதலுண்டு. இதற்குக் காரணம் யாதெனில், முத்துகள் சிலசமயங்களில் சிப்பிகளில் ஓடுக ளில் இராமல் அவற்றின் சரீரத்திலேயே தங்கி நின்றுவிடுவதே. நிற்க.

சிலோன் வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும் மாலையாக க்கோத்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் முத்துத் தூளால் ஆகிய பொடியைக் கொண்டு முத்துக்களைத் துலக்கி மெரு கிடுவார்கள்.

இதுகாறுங் கீழ்த்திசையோராகிய இந்தியரும் சிங்களவரும் முத்தெடுக்கும் விதத்தைக்கூறினோம். இனி மேலைத்திசையோரா கிய வெள்ளையர்கள் அது பெறும் விதத்தை அறிவிப்போம்.

இன்னும் வரும்

ம. கோபாலகிருஷ்ணையர்.

பத்திராதிபர்.

அன்பு.

அன்பாவது தன்னால் விரும்பப்பட்டதோர் பொருளிடத்துச் செல்லும் உள்ள நெகிழ்ச்சியாம். அது குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல இது காண் என்று காட்டக் காணற்பால தன்று. பேய்கோட்பட்டானொருவனது குணமும் செயலும் கண்டவழி இவன் மாட்டு பேய்த்தன்மை உண்டென்று உணருமாறுபோல் அன்புடையானொருவனது குணமும் செயலும் கண்டவழி இவன் மாட்டு அன்பு உண்டென்று உணர்தல்வேண்டும்.

உலகத்துப் பொருள்கள் இரண்டு வகையான் உணர்த்தப்படும். உண்மை மாத்திரம் உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவனவும் என்பனவாம். உண்மை உணர்த்திப் பிழம்புணர்த்தப்படாதன காமம், வெகுளி, மயக்கம், இன்பம், துன்பம் முதலியனவாம். உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவன குடம், மலை, மரம் முதலிய இத்தொடக்கத்தனவாம். அன்பு முதற் கண்ணதாய உண்மை உணர்த்திப்பிழம்புணர்த்தப் படாதவகையின் பாற்படும். அந்த அன்பு பசுக்களாகிய தாய், தந்தை, மனைவி, மக்கள், உறவினர் முதலியோரிடத்துச் செலுத்தும் பாச அன்பும், பரமபதியாகிய இறைவன் மாட்டுச் செலுத்தும் பதி அன்பும் என இருவகைப்படும்.

பாச அன்பு:—இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம். இம்மூன்று பொருளையும் எய்துதற்கு அன்பு இன்றியமையாத தொன்றாக விளங்காநிற்கின்றது. அஃதெவ்வாறெனின் காட்டுதும்,

அறம்:—இல்லறம், துறவறம், என இருபகுதியினையுடையது. இல்லறம் நடாத்தலை மேற்கொண்ட ஒருவனுக்குப் பெருந்துணையாவார் கற்புடை மனைவியும் புதல்வருமேயாம். மனைவி மக்கள் பாட்டு

அன்புடையாள் ஆயின் அன்றே, அவரும் இவன் மாட்டு அன்புடையராவார். இல்லறமும் நடைபெறும். இல்லறம் நடைபெறுதாயின் ஏனைய ஆச்சிரமங்களும் நடை பெறு. அறங்குன்றி மறம் மேலிடும். எவ்வாறெனின் "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை" என்றார் ஆகலின் என்க. அவ்வன்புடைமையைத் தன்மாட்டுத் தொடர்புடையாராகிய மனைவி மக்களிடத்துச் செலுத்தும் பழக்கத்தால் அதனைப்பிறர் மாட்டும் செலுத்தும் விருப்பமுடையவன் ஆகின்றான். ஆகவே பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பினராய் அளவிலாச் சிறப்பினை எய்தா நிற்கின்றான்.

அன்புடையாரே ஆறறிவுயிராம் மக்கட் பாகுபாட்டின்கண் வைத்தெண்ணப்படுவார். அன்புடைமையை முன்னிட்டே எய்தற்கரிய மானிடப்பிறவி எய்திற்றென்பர் மூதறிவாளர். அவ்வன்பில்லாத இல்வாழ்க்கை வறிய பாலைநிலத்தில் வற்றல் மரம் தளிர்த்தலை நிகர்க்கும். அவ்வன்பிலார் கொண்ட உடம்பு தோலாற் போர்த்த என்புக்கூடேயாம். எவ்வாறெனின் "அன்பின் வழியதுயிர்நிலை யஃதிலார்க் கென்புதோல் போர்த்த உடம்பு" எனப்பெருநாவலர் வற்புறுத்தலின்,

அன்புடைமை யறத்திற்கேயன்றி, மறத்திற்கும் துணையாய் நிற்கும். எவ்வாறெனின் ஒருவன் செய்த பகைமைபற்றி, அவன்மீது உள்ளத்து வெறுப்பு நிகழும், நிகழவே அவனுக்குத் துன்பஞ் செய்ய வேண்டும் என்னும் துணிவுண்டாகும். அன்புடையானாயின் அம்மறத்தை நீக்கினவனாய் பகைமை நீங்கி பொறுமை யடைந்து மேம்பட்டவனாவான்.

துறவறம்:—துறவறமாவது இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையாராய்ப் பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்குரிய அறம். இத்துறவறத்தை நாடி அவ்வொழுக்கத்தினை மேற்கொண்டு ஒழுகுவோர்க்கு அன்பு இன்றியமையாததாக விளங்குகின்றது. இல்லறத்துக் குரியது அன்பு. துறவறத்தார்க்குரியது "அருள் என்னும் அன்பீன் குழவி." ஆகவே அருளும்

அன்பின் பாற்படும். தமிழ் மறையாகிய திருக்குறளின் கண்ணும் இவ்வருளுடைமையே துறவற இயலின் முதற்கண் கூறப்பட்டுள்ளது. இவ்வருளுடைமையானன்றோ துறவொழுக்கம் பூண்ட தவசிகளும் தம்மைச் சரண்புகுந்தோர்க்கு நன்னெறி காட்டியும் எண்ணரிய நூல்களை இயற்றியருளியும் அளவிலா நன்மைகளை அகமகிழ்ந்து புரிந்திருக்கின்றனர். அப்பெரியோர்க்கு இவ்வருளுடைமையே அரும் பெருஞ்செல்வமாம். இதற்கு "அருட்செல்வம் செல்வத்துட்செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள" என்னும் ஊந்தியுரை சான்றுபகரும். எல்லாச் சமயத்தாரானும் கொண்டாடப்படுவது அருள். அருளுடையான் பாவகாரியம் ஏதும் செய்யத் துணியான். அவனுக்கு இம்மையிலும் துன்பம் உண்டாகாது. அதனை மறந்தாரே தாம்செய்தற்குரிய மறுமைப்பயனையும் மறந்தவராவர்.

பொருள் இல்லாதார்க்கு இவ்வுலக இன்பம் இல்லையாவது போல அருள் இல்லாதார்க்கு அவ்வுலகத்துப் பெறும் வீட்டின்பம் இல்லையாம். பொருளில்லானாகிய வறியோன் ஒருகால் செல்வத்தாற் சிறப்பெய்துவான். அருளில்லான் பிழைத்தலரிது. அருளுடையானோ என்றும், அழியாப்புகழை எய்தினவன் ஆவான். எவ்வாறெனின் உரைத்தும்.

அமரர்கட்கு இடுக்கண் விளைத்த விருத்திராசுரனொடு இந்திரன் போர்புரிந்து தோற்றகாலத்து, நான்முகக்கடவுள் இந்திரனை நோக்கி "உன் குலிசம் மிகப்பழையது. பகைவரைவெல்லும் ஆற்றல் அற்றது. புதியது ஒன்று ஏற்றுப்போர்க்குச் செல்வையாயின் வெல்லுவை. அது செய்தற்குத் ததீசி முனிவர் முதுகந்தண்டே ஏற்றது என்று புகன்றனன். அது கேட்ட புரந்தரன்முனிவர்பாற் சென்று தனது குறை கூறி இரந்து நிற்ப அவர்

நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே.

நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோ
யடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனில்
எடுத்தயாக் கையின்பய னிதனின்யாவதே.

என்று கூறி இவ்வெற்றுடம்பு வீணேகழியாமல் பிறர்க்குப் பயன்படின் இதனினும் எய்தற்பால பேறு யாதென்று தன் முதுகந் தண்டினையளித்தனர் என்னின் அம்முனி புங்கவர்தம் அருட்பெருக்கை என்னென்றுரைப்பது!

பொருள்:— பொருள் கூறுவான்தொடங்கிய தேவர்பொருளீட்டற்குத்துணைக் காரணமாகிய அரச நீதி கூறவே அடங்கும் எனத் துணிந்து, அதனையே வற்புறுத்தி இருபத்தைந்ததிகாரத்தாற் கூறினர். அவ்வரசற்கும் அன்புடைமை இன்றியமையாததாய் விளங்காநிற்கின்றது. இன்றேல் குடிகொள்ளாச் செயல்களைச் செய்து கடுந்திறை இறுத்து கொடுங்கோன் மன்னவனாவான. "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னனிலம்" என்றபடி முறைவேண்டினார்க்கும், குறைவேண்டினார்க்கும் காண்டற் கெளியனாய் யாவர், மாட்டும் கடுஞ் சொல்லன் அல்லனாதற்கும் இவ்வன்புடைமை இன்றியமையாததாய் விளங்குகின்றது. அன்பின்றேல் காட்சிக் கெளியனாதலும் கடுஞ்சொல்லன் அல்லனாதலும் யாண்டையதென்க.

தொடரும்

சிவஞானம்பிள்ளை.

உலகியலும் ஒழுகுமாறும்.

"ஒரு மனிதன் சந்தோஷ மற்றவனாக இருக்கிறானென்றால், இஃது அவனுடைய சொந்தக் குற்றமாகவே யிருத்தல் வேண்டும்; ஏனென்றால் கடவுள், எல்லா மனிதரும்சந்தோஷ முற்றவராயிருக்கவே சிருஷ்டித்தார்" (எபிக்டெட்ஸ்)

உலக இயல் துன்பமுடைய தாகத்தோன்றுகின்றது; இஃது எவர்க்கும் அநுபவ மாதலின் விரித்துரைக்க வேண்டுவதின்று.

நூற் சான்றாகவும் நன்கணியார் என்ற வோர் தமிழ் முதறிஞர் "இன்னாதம்மவிவ்வுலகம்" என்று உலகியல் மொழிந்தருளி, அத னுடனொழுக "இனியது காண்கிதனியல் புணர்ந்தோரே" (புறம்) என்றுஞ் சுட்டியருளிப் போயினமை புலனும். இம்முது மொழிக் குள்ள கண்டாரும் "கொடியது இவ்வுலகின் இயற்கை" என்றதனோ டமையர்து பிறன் கோளாக "இவ்வின்னாமையை இனியவாகக் கா ண்க..........." என்று உரை கண்டமையும் இன்னும் இதனைத் தெளி வுறுத்தும். நிற்க.

இதற்கு மூலமாயுள்ளார் யாவர் என்பதுமுதல் ஆராய்ச்சியாகும்; காணப்படுகிற ஒவ்வொரு பொருளும் ஒன்று மற்றொன்றைப் போலிராமல் வெவ்வேறு விதமாய் ஆக்கப் பட்டிருப்பதைக் கண் கூடாக் காண்கின்றோம்.

உருவத்தை நோக்கினும், கேவலம் ஓர் மரத்தின் ஓர் கிளையி னோர் பாகத்தின் ஒர், இணுக்கில் பொருந்திய ஓர் இலையைப் போல, இவ்வுலகத்தில் அதே வகுப்புற்ற பல மரங்களில வாய்ந்த ஓரிலையுங் கூட நுண்ணிய நோக்கில் ஒத்திருக்காமை நேரில் காணும் பிரமா ணம்;

பயனை நோக்கினும் அதேது அங்ஙனமே அமைந்து கிடக்கின் றது; செய்யுள் வழக்காகவும் "ஓரில் நெய்தல் கறங்க ஓரில்,ஈர்ந்தண் முழவிற் பாணிததும் பலே" கேட்கின்றோம்.

(இங்ஙனமாக அமையப் பெற்ற முறைகளையறிய, பற்பல பாகு பாடுகளுற்ற மனிதனை இயற்கை நோக்கு முதலில் தூண்டிவிடு கின் றது. அங்ஙனந் தூண்டுதலை விளக்கிவிடுவதே மேனோக்கிச் செல் வதற்குச் சிறந்த வழியாகும்.)

தோற்றப் பட்ட எப்பொருள்களும் அவற்றின் நன்மையைக் குறித்து உண்டுபண்ணப் பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது அவற் றிற்குக் காரணமாயிருப்பது எதுவோ அதனுடைய நன்மையைக் குறித்து உண்டு பண்ணப் பெற்றிருத்தல் வேண்டும்; இவ்வாறு வே ண்டுதல் உளநூற் புலவர்க்கும் ஒப்ப முடிந்த தாகும்.

சிறிய அகப்பை யதன் நன்மையைக் குறித்து ஆக்கப் படாமல் அதை யாக்கியோன் நன்மையைக் குறித்து ஆக்கப் பட்டிருக்கின்

றது. ஆனல் ஆறறி வுடைய மனிதனே அவன்றன் நன்மையைக் குறித்தே உண்டு பண்ணப் பட்டிருக்கிறன் என்பதே கருதப்படும்.

"நிலை பெற்ற உண்மையான இன்பத்தை நாம் அடையவே, நாம் தோற்றப் பட்டிருக் கின்றேம். ஓ இராகுல! "நீ இதை உணர் வாயாக" (புத்தர்) என்ற வாசகமும் இதனை வலியுறுத்தும்.

வியாபாரஞ் செய்யும் வணிக னொருவனது பிரதிநிதி, அவ் வணிகனது பொருளைக் கண்காணித்து, அப்பொருள்களின் ஆக்க அழிவுகளைக் கவனித்து வரத்தான் கடமைப் பட்டவனே யன்றி அவற்றின் ஆக்க அழிவுகளை அநுபவிக்கக் கடமைப் பட்டவன் அன்றே. ஒருக்கால் அப்பொருள்களைத் தனதென்றே நினைத்து நடத் திவரினும், உண்மையில் முடிவில் 'அவற்றின் பயன் 'பிரதி நிதிக் குரியது' என்பது சொன் மாத்திரையில் நிற்குமேயன்றி செய்கை யில் உண்மையாக மாட்டாது; பயனே வணிகனுக்கே உரித்தாகும் இஃது உலகியல்;

இவ்வாறே இவ்வுலகில் இயங்கியல்பொருளாகிய நாம் ஓரிறைவ னால் உண்டு பண்ணப் பெற்று அவன் ஏற்படுத்திய விதிவழியே யொழுகி வரக்கடமைப் பட்டவராயிருப்பின் தமக்கென ஓர் கட மையு மேயின்றி அவ்வொழுக்கின் பயனாக விளையும் ஆக்கக் கேடுகள் பாவ புண்ணியங்கள் நம்முடையன வாகவே, அவன்வழி யொழுகி யார்க்கு அவை பொருந்து மென்றலும் நியாய மாகாதே; அங்ஙனம் பொருந்தலையாவர் ஒப்புவர்?

ஆயின், இவ்வுலகியற்கையில் இவ்விதி மற்றோர் பகுதியாய்க் கிளைத்து மாறியிருக் கின்றது; அதை மற்றோர் வாயிலாய் மற்றோ ரிடத்துக் காண்போம்.

"உனக்கு அதிகாரி நீயே; மற்றப்படி உனக்கு எவர் அதிகாரி யாயிருக்க முடியும்" —தர்மபதம்.

என்பது புத்தர் வாக்கு

இதுகொண்டு நமது ஆக்க அழிவுகளுக்கு (இலாப நஷ்டங்கள்) நாமே காரணராகின்றோம் என்று யூகித்துணரலாம்.

ஒவ்வொன்றும் நம்மால் நம் நன்மைக்காகப் பிணைக்கப் பட்டி ருக் கின்றதே யொழிய பிறரால் பிணைக்கப்படுவதன்றாம்;

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்றார் கணியன் பூங்குன்றனாரும்;—(புறம்)

உனக்கு நீயே மித்துரு; உனக்கு நீயே சத்துரு; ஏன் மற்றவர் உனக்கு ஒன்றை யியற்றுந் தன்மையராவர்"? என்றார் பகவத்கீதை நூலுடையாரும்:—

"மனிதன் பராதீனப் பட்டவனல்லன்—சுயாதீன முள்ளவன் தன் சுயாதீன மனத்தைச் செலுத்தித் தன் கருமங்களைத் தானே ஒழுங்கு பெறச் செய்விக்கக் கூடும்" (ஸ்மைல்ஸ்) என்றார் ஓர் மேலை யறிஞர்.

இவற்றினின்று நாமே ஒன்றைச் சுயாதீன புத்தியுடன் செய்ய வேண்டியவராகின்றோம்; அங்ஙனம் செய்வது நன்னெறியைப் பற்றியதாயிருத்தல் வேண்டும். ஏன்?' அது மற்றோர் நெறி பற்றிய தாயிருக்கப்படாதோ? எனின்! நன்னெறி பற்றியதற்கே உண்மையான இன்பமும், அகமகிழ்ச்சியும், நிலையுற்ற பயனும் கிடைக்குமென்க.

உலக இயல்பில், எவரும் எவ்விதமாயாவது இன்பம் அடைய வேண்டுமெனவும், துன்பமே வரக் கூடாதெனவும் விரும்புதல் எவரும் மறுக்கத் தகாவுண்மை.

நன்னெறி பற்றி யொழுகும் மக்களே தாங்கள் ஒழுகும் இயலுக்குத் தக்கதாக இன்பத்தையடைகின்றனர்.

தீநெறி சென்று மருண்டு ஒழுகும் மாக்கள் முடிவில், அதன் காரியமாய்த் துன்பத்தைப பெறுகின்றனர்; தீயநெறியில் விளைவது துன்பமேயாகும்.

அப்படியானல் சில முதலில் நேர்மையாய்த் தோன்றி முடிவில் துன்பத்தையே விளைவிக்கின்றனவே; சில தலைப்பில் தீமை போல் விளங்கி யிறுதியில் இன்பத்தைத் தருகின்றனவே யெனின்,

"துன்பமும் இன்பமும் ஓர் தோற்றத்தினல் நிதானிக்கத் தக்கவல்ல; தீயநெறியும் தூயநெறியும், அங்ஙனமே அவை விளையும் பயனை நோக்கித் தீர்மானித்தல் வேண்டும்; உண்மை யுணர்வும் இதுவே"—(பித்தாகிரஸ்) என்ற பெரியார்பொருளுரை நோக்குக.

இதனல் பிறர் பார்வையில் நேர்மையென நின்றியங்கும் அம்பு. அதன் பயனை நோக்கி நன்மை யற்றதெனத் தேறலாகும். வீணை தோற்றத்தில் செவ்விய தன்மை பெற்றில தாயினும் அதன் பயனை நோக்கி நன்மையுற்றதெனத் தீர்மானிக்கலாகும்

அறிஞர் பெருந்தகையான திருவள்ளுவனார் "வினைபடு பாலால் கொளல்"

என்றதும் இக்கருத்துப் பற்றியே.

இங்ஙனம் உண்மை யியலைப் பகுத்துக் கண்டு நன்னெறி யொழுகுகையில் எதிர்பாராத தாங்க இயலாத பற்பல இடையூறுகள் தோன்றுகின்றன; அவற்றுடன் நின்றெதிர்த்துப் போராடல் மிகவும் அருமையாகவும் கஷ்டமாகவு மிருக்கின்றது;... அப்பொழுது நம்மையே நாம் பண்படுத்திக் கொள்ளல் வேண்டும்; அவ்விதம் பண்படுத்திக் கொண்டோமாயின் இவ்வுலகுடன் ஒழுகல் நமக்கு எளிதாகும்.

"வயித்தியனே உன்னையே முதலில் நீகுணப்படுத்திக்கொள்," 'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்,' என்பன முதுமொழிகளாகும். நாம்விரும்பிய வாறு உலகுடன் ஒத்துழைக்க நம்மனப்பண்பு இன்றியமையாததாக இருக்கின்றது. இப்பண்பு நாளடைவில் வளர, நம் மனச்சான்றும் அதனுடன் ஒத்துழைக்கும்; அங்ஙனம் உழைத்தற்கு முதலி விருந்தே நற்பழக்கங்களைக் கையாடுதல் வேண்டும்; அப்பழக்கங்களே விரைவில் வழக்கங்களாக மாறி விடும்; அவ்வழக்கங்கள் செய்கையிலேயே நம்மன மொழி மெய்கள் மூன்றின் பாலும் செலுத்தப் படல் வேண்டும்.

இதுவே உலகியலறிந்து ஒழுகும் மக்கருக்கேற்ற முதற்படியாகும்.

மனதால் ஒழுகுதலாவது:—நற்கருமங்களைச் சிந்தித்து மேனேக்காகும் பரோபகாரத்தில் சிந்தை செலுத்தலாம்.

"உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்" (குறள்)
"நல்லவை நாடு மின்" (மணிமேகலை)

என்ற பொருளுரைகளும் இது பற்றியே எழுந்தனவாகும்.

மொழியினால் ஒழுகலாவது:—தன்னியல்பைத் தானறிந்தவாறு மொழிதல்; கூறிய மொழிகள் பிழுக்காகா திருத்தல் முதலியன;

"ஒல்லுவ தொல்லு மென்றலும் யார்க்கு மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டும் ஆள் வினை"

என்ற புறப்பாட்டும், இக் கூற்றின் பகுதியைப் பேணும்.

மெய்யினால் ஒழுகல் பிறர்க்கு உபகாரஞ் செய்ய வியலா திருப்பினும் உபத்திரவ மாகினும் செய்யா திருத்தலாம்.

"நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமின்,"

"..................நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே"
என்ற நரிவெரூத் தலையார் உண்மையுரையும் இதுவாம்.

தொடரும்.

நச்சுவார்க் கினியன்.

செய்யுளும் வசனமும்.

எல்லாம் வல்ல இறைவ னடியிணை
ஒல்லையி லேத்துது மொளிபெறற் பொருட்டே.

செந்தமிழ்ச் சீரியர்காள் !

நான் "செய்யுளும் வசனமும்" என்ற வியாசத்தைத் தொடங்கற்கு முன்னரே இரண்டொன்றைச் சொல்லிப் பின்னர் வியாசத்தை விரிக்கின்றேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பதின்மூன்றாவது வருட மகோற்சவத்தை நாளிது வருடம் மே மாதம், இராமநாதபுரத்தில் கனம். P. இராமநாதன் அவர்களது அக்கிராசனத்தின்கீழ் இராமநாதபுரம் மகாராஜா அவர்கள் தமது சொந்தச் செலவிலேயே நடத்தியபொழுது, சங்கத்து மானேஜர் கடிதப்படி மேற்கண்ட வியாசத்தைப் படிப்பதாக ஒப்புக்கொண்டு இராமநாதபுரம் கனம். அசிஸ்டெண்ட் திவான். அவர்கட்கு எழுதினேன். அவர்களும் நிகழ்ச்சிக்குறிப் (புரோகிராம்) பில் குறிப்பிட்டிருந்தனர். குறித்தகாலத்தில் தமியன் இராமநாதபுரம் சென்று கற்றவர்முன் மேற்கண்ட வியாசத்தைப் படித்துப் பெரியார்களது ஆசிபெறக்கூடாதபடி எதிர்பாராததடை நேர்ப்பட்டதைப்பற்றிப் பெரிதும் விசனிக்கின்றேன்.

சபையில் வாசிப்பதற்கியலாதுபோயினும் சிறந்த பானுவாயிலாவது வெளியிட்டால் கற்றோரும் மற்றோருங் கண்டுகளித்து இன்னும் இதுபோன்ற வியாசங்களை எழுதுதற்கு ஊக்குவீர்களென்று எண்ணி வெளியிடலானேன். "குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் - கற்றறிந்தமாந்தர் கடன்" நிற்க.

அறிவிற்சிறந்த ஐயர்காள் !

இயங்குவ நிற்பவான இவ்வுலகின், இயங்குவனவாய சீவர் ஒருபெற்றி நோக்கிப் பகுக்குங்கால் இருபெரு வகையினவாம்:—தம்மனங் கொண்டவற்றைத் தெரிக்குஞ் சொற்களானே பிறர்க்குத் தங்கருத்தைப் புலப்படுத்தும் மாந்தரும், அவ்வழியை உணராதும், அன்றி அங்ஙனம் உணர்த்தும் மொழிகளைக் கூட்டி இசைக்கவல்ல உறுப்புக் குறைந்தவைகளாயும் உள்ள மிருகங்களும் என இருவகைடாம். இக்கருத்தையே "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்னும் கூற்றும் வலியுறுத்தும். எனினும் இக்கொள்கையுஞ் சிறிது திரிபுடைத்தாமெனச் சிலர் கொள்ளவமையும். எவ்விதமெனின், காரணம்இன்றி நிகழும் ஒருகாரியம் உளதோ? இல்லை, அங்ஙனமாயும் படிப்படியாய் மிருகங்களினின்றே மக்கட்டொகுதி உண்டாயிருக்கிறது என்னும் தத்துவங்கள் யாண்டையவோ? முதலிற் பகுத்தறிவில்லா மிருகங்கள் பின்னர் அதனை எப்படி அடைகின்றன என்னுங்கேள்வி பிறக்கக்கூடும். அற்றன்று. ஒரு எண்ணையே பல தடவை பகுத்துக்கொண்டு போங்கால் மீதமானதைக்கருதலவைக்குங் குறை

யுங்கால் சுன்னமாகவே கொள்வது கணிதர் பலர்க்கும் உடன்பாடாயினமையின் மிகக் குறைந்தவுள்ள அறிவினையுடைய பிராணிகளையும் அறிவிற்குணியம் என்றே கருதலாம். இங்ஙனம் சிருட்டிகளுள் பெரியோனுயும் தன் ஆற்றலால் சிருட்டிப் பொருட்களைத் தன் வயமாக்கவல்லவனுயுமுள்ள மனிதன் தன் கருத்தை வெளியிடுவது அவையத்தற்கேற்ற சொற்களால்தான். பலகருத்துக்களையும் மிக சுலபமாக வெளிப்படுத்தக்கூடிய சொற்றொகுதிகளையுடைய பாஷைகளையே சிறந்த பாஷைகளென்றும் அப்பாஷையிற் பேசுபவர்களை சிறந்த நாகரீகத்தை உடையோரென்றும் சொல்கிறோம். புலனறிவிற் கெட்டாவிஷயங்களைத் தெள்ளிதின் உணர்த்துந் திறனற்ற சொற்களை மலிந்த ஒரு பாஷையைச் சிறந்தபாஷைகளின் வரிசையில்வைத்து எண்ணலுஞ் சீரிதோ? உள்ளக்கிடக்கையை உணர்த்துவது பாஷையேயெனினும் உணர்த்துமுகத்தான் வேற்றுமை ஆராயுங்கால் "செய்யுள்" என்றும் "வசனம்" என்றும் இரண்டு வகைப்படும். பரந்தகருத்தைச்சுருக்கக்கொண்டு செவியமுதெனஇன்பம்விராய் பாமரரும் இஃது பாட்டேஎன்னுந் துணிபுடன் கூறப்பெற்றதாய் அறிவு நிரம்பப்பெறுமழலைக்குழவியையுஞ் சன் வயப்படுத்துவதாய் அணிகலன் என்னப் பொருளணிகொண்டு மகளிர்சிலம்பே போன்று இசையோடு பாவி கூப்பதாய் உள்ளபாஷையின் ஒருபகுதியே செய்யுளாம். எழுவகைத் தாதுவின் உயிர்க்கிடனுய் யாக்கப்பட்ட உடலேபோல் பொருட்கிடனுய சொற்களால் அணிகலங் கொள்தா யாக்கப்படுவதே செய்யுளாம்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார் நன்னூலுடையாரும். "விருத்தமென்னும் ஒண்பாவில்உயர்கம்பன்" என்று அறிவுடையோர் ஏத்தும் புலவர் பெருமானும் செய்யுள் என்பதைப் பற்றிய தங்கருத்தை வெளியிடுவார் கோதாவிரியின் இடையறா ஒழுக்குக்கு கவியின் ஒழுக்கையுந் தன்மையையும் எடுத்து மிகத்திட்பநுட்பஞ் செறிந்த செய்யுள் ஒன்றில் தீட்டினர். பாட்டென்பது இன்னது என்பதனை விளக்குவதோடு தானும் ஓர் இலக்கியமா யமைந்துள்ளது. அதுவருமாறு:—

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி யைந்திணை நெறியி னாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

இங்ஙனம் புலவனின் மாட்சிதெரிக்கும் பிண்டமாய செய்யுளின் ஒருமேதக்க குணம் என்னையெனின், வண்ணங்கள் அமைக்கவேண்டிய இடங்களில் பெரிதாஞ் சிறிதாந் தீட்டி உருவத்தைக்கோட்டும் கைதுறைபோய ஓவியவல்லவனின்

சித்திர படாம்போல மனத்தைக் கொள்ளைகொண்டு மயங்கிய மதியைத் தெருட்டி, சீரிய வழியைச் சிந்திக்கச் செய்வதே, இயற்கைக் காட்சியை மனக் கண்ணிற்குப் புலப்படுத்தி அங்ஙனம் காணப்படும் பொருளின் ஆகாரம் இன்னதென்பதை நினைக்குந்தோறும் புலப்படச்செய்து மேலாந்தரத்தில் மனத்தை நாட்டி எப்பொழுதும் அதுபோன்ற பாக்களிலேயே பயிலவேண்டுமென்னும் விருப்பத்தைக்காட்டி நவநவமானகருத்துக்களை உன்னுந்தோறும் ஊட்டுவதும் செய்யுளின் சிறந்த தொழிலாம். உலகம் இன்னது ஆன்மா இன்னது மனம் இன்னது என்று பலபடவுரைத்துப்படிப்போர்மனதைப்பிரமிக்கச்செய்வதுடன் அமைதலையளிய அறைகுறை கருத்துக்களைத் தெரிந்து இருதலைக்கொள்ளி எறும்புபோல் மனத்திற்குத் தடுமாற்றம் உண்டாக்கி இவ்வாசிரியர் கூறியது போதும்என்று நினைக்கும்படிச்செய்வது செய்யுளன்று. அப்போலிச் செய்யுட்களின் கருத்தை அறியமுயல்வது எட்டாத தூரத்திலுள்ள பயனற்ற எட்டிக் கனியை உதிர்க்கநினைவதை ஒக்கும். மற்றும் முற்கூறிய குணம் நிறைந்த உண்மைச்செய்யுள் செய்யும் புலவனே ஒருவிஷயத்தைப்படிப்போர்க்கு அளிப்பதோடும் அமையாது மனத்திற்குக் களிப்பையுங் கிளர்வையும் ஏதோ தனக்குத் தெரிந்தவோர் விஷயத்தையே மறுபடியும் கேட்பதுபோல் அவ்வளவு இலகுவாயுந் தன்கருத்தைத் தெளிவிக்கின்றான். உதாரணமாக இரண்டுபொருட்கள் உரைஞ்சுவதால் சூடுபிறக்கும் என்பதைத் தெரிவிக்கும் பௌதிகசாஸ்திரியைக் காட்டிலும்,

"நீர்வரு மின்னல் தம்மைச் செய்யினுஞ் செயிய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுத்தித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆகலி அமரருய்ய அமிழ்துபண் டளித்த தன்றே"

என்று தங்கருத்தை வெளியிட்ட கம்பரே சிறந்தோர். காதல் இத்தெனவும் மனம் இத்தகைத்தெனவும் கிளத்தும் மனோதத்துவ சாத்திரியாரினும்

"தழைத்த அன்புடைக் கணவனின் தகைமைசால் காத்தின்
விழைத்த காதலிற் சருவியான் விழைவொடு நோக்கச்
செழித்த வானினும் பரவின செறிந்தவெம் முயிரே
பழிச்ச லில்லவன் பார்வையென் பார்வையிற் படலும்"

என்றும்,

"படங்கள் என்னவும் பதுமையே என்னவும் யாங்கள்
இடங்கள் மாறிலா வகையினி லிருந்துழி இருந்தே
திடங்கொள் மெய்யுமோ தீவிர மனதையுங் கடந்த
தடங்கொ ளோவையிற் கணக்கின்றிப் பற்பகல் தணந்தேம்"

என்றும்

"சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத் தொட்டில்வைத் தாட்டி யாட்டித்
தொலையினிற் பின்னல்போற் சங்கற்ப மொன்றிற்றொடுக்கும் தொடுத்தழிக்கும்
பொல்லாத வாதனையெ னும்சப்த பூமியிடை போந்தலை சுற்றி யாடும்
புருஷனில் அடங்காத பூவைபோற் றனே புறம்போந்து சஞ்சரிக்கும்
கல்லோடி ரும்புக்கு மிகவன்மை காட்டிடும் காணாதவைகேட்ட வெல்லாம்
கண்டதாக் காட்டியே அணுவாச் சுருக்கிடும் கபடநா டக சாலமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை ஏழையாம் என்றால் அடக்க வசமோ" என்றும் கூறியபுலவர்களை முறையேசிறந்தார். துன்பங்கொண்ட நிலையிற்றனை அறுதியிட்டுரைக்கும் மனநூலினும்,

"விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இறைவனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயர்உழந் துயிர்த்தல்
அழுதல் அன்றிமற் றயலொன்று செய்குவ தறியான்"

என்னுஞ் செய்யுள் எத்துணைச்சிறப்பு வாய்ந்தது.

இன்னும்

"வாழ்க்கை யரும்பி மலர்ந்தணிந்து வயதாய் முற்றிக் கழியுமுன்
வாழ்க்கை இடையே உயிரினுக்கோர் வாழ்வே அளித்தின் விருந்தூட்டி
வாழ்க்கை மாறு மண்ணகத்தே விண்ணும் இடைக்கும் பெயராதாய்
வாழ்க்கை நீங்காச் சுருந்தலையே என்றேன் வரைந்தே னனைத்தையுமே"

என்ற கவிஞர்பெருமானே மரஞ்செடிகளினியற்கையையும் நிலையையும் மாறாதுரைத்தவராவர்.

இவ்வண்ணம் உரைபெறும் செய்யுட்களிலும் அகவற் போக்காகப் போகின்ற செய்யுட்களே கருத்தைமுற்றும் புலப்படுத்துந் தகையவாம். சீரிய செய்யுளாளர்யாரும் தாமியற்றும் செய்யுள் தங்கருத்தை முற்றுந்தெரிவிக்க ஏற்றதா என முதலில் ஆராயவேண்டும். எதுகைமோனைகளையே பெரும்பாலுங் கொண்டியாக்கப்பெறும் செய்யுட்களோ ஆசிரியர் கருத்தைத் தெள்ளிதின் உணர்த்தாததோடு "எதிர்பாராத வேறொரு கருத்தையுங் கூட்டிவைக்கும் இன்னும் முரசபந்தம் யமகம் திரிபுமுதலிய சொல்லணிகளைக் கருதும்மனமுங் குழறுபடுமாகையால் இம்மிறைக்கவிகள் காலத்தை வீணே கழிக்கும் சாரமற்ற கவிகளேஎன்பதை மட்டுங் குறிப்பாம். சிற்சிலகருத்துக்களை வெளிப்படுத்த பாஷைக்கு ஆற்றலில்லை என்பது யாருமுணர்ந்ததே. அது அங்ஙனமாகவும் வசனத்தைக் கைவிட்டு, கவிசெய்யப்புகுவோர் காலதாமதம் இல்லாமலும் எளிதில் யாவரும் பொருளறியும் வண்ணமாயும் தாங்கொண்ட கருத்தைத்தாழ்ச்சியில்லாமல் கண்ணாடிபோற் காட்டக்கூடிய அவ்வளவு தெளிவுவாய்ந்த செய்யுட்பகுதியையே நாடல்வேண்டும். ஒருஇனத்தார்க்கு செய்யுள்இயற்றுந்திறன்

இப்பெற்றித்தென்பதை அன்னார் கைக்கொள்ளும் செய்யுளியற்றும் விதிகளே சீரிய சான்றாகும். பண்டைக்காலத் தமிழ்ச் செய்யுட்களெல்லாம் ஆழ்ந்த கருத்தைத் தெரிப்பனவும் இயற்கைமுறையினை நன்கெடுத்துரைப்பனவும் எழுதுபவர்க்கும் அவைகளைப் படிப்பவர்களுக்கும் சுகத்தைஅளிப் பனவுமாய் அமைந்துள்ளன என்பது அவைகளை உணரும் ஒவ்வொருவரும் அறிந்ததே. மலைக் காட்சியை நேரிற் கண்டாலும் உணரமுடியாத அவ்வளவு சீரிய மதிநுட்பத்தோடு படாங்கோல் இஃது என இடம்படயாத்த குறிஞ்சிப் பாட்டுடைய கபிலர்முதலிய பண்டைப் புலவரெல்லாம் இயற்கைக்காட்சியைக்கண்டு களித்து ஆனந்தம் ததும்பி வழிவதேபோல் பாக்களை இயற்றினர். சிலம்பை இசைத்தனரோ அற்றேல் தம்இசையைத்தான் இசைத்தனரோ எனமதிமாறும் யாத்த இளங்கோவடிகளும் தாம்கண்ட நகரங்களையும் அவையிற்றிற் பரந்தகாட்சியையும் தாம் கண்டுங்கேட்டுமிருந்த ஓர்சரிதையின் வாயிலாகக்கூறினர். இவர் கூறிய

"புணர் துணையோ டாடும் பொறியலவ னோக்கி
இணர்கைதைப் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன வொலிதுறைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி மைவாலாய் வண்ண முணரேனால்"

என்னுஞ் செய்யுள் எவ்வளவு நயம் வாய்ந்தது.

தொடரும்.

இங்ஙனம்.

கரந்தை T. S முருகேசன்.

காக்கை ஓர் பறவை.

(கக அ-ம் பக்கத்தொடர்ச்சி.)

கூடு கட்டத்தெரியாத குயில், காக்கையை வஞ்சித்து அதன் கூட்டிலே வந்து முட்டையிடும். அம்முட்டைகளைத் தம் முட்டைகளோடு சேர்த்துக் காக்கைகள் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். அக்குயிற் பிள்ளைகளுக்குப் பறக்கும் பருவம் அல்லது கூவும் பருவம் வரும் வரையில் தம் குஞ்சென்றும், குயிற் குஞ்சென்றும் பேதம் தெரியாமல் அவைகளுக்கு உணவு கொடுத்துப் பாதுகாக்கும். குயிற் பார்ப்புகள் சத்தமிட ஆரம்பித்தவுடன் காக்கைகள், அத்தொனியைக்கேட்டுத் தம் இனம் இல்லென்று துரத்திவிடும். இது, காக்கைக்கும், குயிலுக்கும் போந்த பரபிருதம் என்ற பெயரானும் குயிலுக்குப்போந்த காகபுட்டம் 'பரபிருதபுட்டம்', 'பரபுட்டம்' என்ற பெயர்களானும் நன்கு விளங்கும் என்பன அமரம் நாமலிங்கானு சாசனம், அபிதான சிந்தாமணி, அன்றியும் செய்யுள்:

"கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவும்
என்னீன்ற யாயும் பிழைத்ததென்."

காக்கையும் - குயிலை வளர்த்துவிட்ட காகமும். (நாலடியார், காம, ௧௦, எனவும் "மானவர் ...., யானும் பின்றளவு மென்மக ளென்னு மியற்கையா லினிமையின் வளர்த்தேன், கான மென் குயில்போல் வந்துமீ ளவுந்தன் காவலர் குலத்திடைக் கலந்தாள்."

'குயில்போல்' என்றதில் குயிலைக் காகம் வளர்க்கப் பின் அக் குயில் அதனிடை நில்லாது தன் இனத்திற் போய்ச்சேரும் என்ற செய்தி வெளியாம். (வில், பாரதம் ஆதி, குரு ௧௦௯) எனவும் "மண்ணுக்கிரங்கி.........குயிலே, தாய்வெறுக்க நின்செவிலி தான் வெறுக்க யாம்வெறுக்க நீவெறுத்தா யில்லையுயிர் நேர்ந்து."

'நின்செவிலி தான் வெறுக்க' என்றதில், காகம் குயிலை வளர்த்து அக்குயிற் குரல் கேட்டவுடன் தம் இனம் இல்லென்று வெறுத்து விடல் புலனும். (சர்விக், ௫௫) எனவும்,

"குயின் முட்டை தனதென்று காக்கையடை காக்கும்." (குமர, ௯௨.) வனவும்,

"உயிர்த்த பொழுதே நின்குரல்கே ளாமுன்னோடிற் றீன்றதாய்
நயத்தின் வளர்த்த தாய்குரல்கேட் டனுமே நடுவகத் துறந்ததால்
பயத்தமலர்ப்பூங் காவனத்தி லிருந்துபல்காற் கூவினும்
செயிர்த்து நின்னைக் குயிலேநான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ"

ஈன்ற தாய் - குயில். வளர்த்த தாய் - காக்கை. (பிரபுலிங்க லீலை.) எனவும் வரும்.

ஹிந்துக்கள் காக்கையை அழைத்துத் தாம் உண்ணும் உணவின் முற்கவளத்தை அவைகளுக்கு இட்டுண்ணுவது வழக்கம்; இதனை, உலகத்தில் இறந்தவர்கள் மகிழுமாறு அவர்களை நினைத்தூட்டும் பலியென்ப. பிரமம், தெய்வம், பூதம், பிதிர் மானுஷம் என்னும் ஐவகை யாகங்களில், பூதயாகமே பலியீதலாம்; அது வாயசபலி, வாயச பிண்டம் எனப்படும் இது காக்கைக்குப் போந்த 'பலிபுட்டம்' என்ற பெயரானே விளங்கும்.

காக்கை தம் வாழ் நாள்களுள், கொலை நோயின்றி வசிக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் விதித்துள்ள வயதுகளுக்குமேல் அதிக காலம் ஜீவனோடிருக்கும். உதாரணம்:

இராவணன் திக்குவிஜயத்தின் பொருட்டு இந்திரன் முதலான இமையவரும், மாதவரும் சேர்ந்த மருத்தன் என்னும் ஓரரசன் யாகசாலையை அடைய அப்போது, "வாசவனஞ்சி..........காசினமன் கலங்கிக் காக்கையடிவாக" என்றபடி, யமன், காக உருக்கொண்டு உயிர் தப்பித்துப்போதலாலும் அமையத்து, "வனத்தி லோர் காக்கைகண்டு மன்னுசி ரியமன் கூறும், உனக்கொரு கொலை நோயின்றி யுலகத்தி லிருந்தோர் தம்மை, நினைத்தனை யூட்ட வன்னோர் மகிழநீநிலத்தில் வாழும், அனைத்துயிர் களினுந் தீர்க்க வாயுவுண்டாக என்றான்." (ஒட்டக், ராமா, திக்கு, ௨௭. ௨௮) என வரும்;

R. பத்பநாப ஐயர் அவர்களும் காக்கையின் வயது 100 என்றனர். (நல்லாசிரியன் பத்திரிகை, வய்து 8, 11, பக்கம் ௨௯) புசுண்ட யோகிகளும் காக உருப்பெற்று நீண்டகாலம் உயிருடன் இருந்தனரென்று வாசிட்டம் கூறுகிறது.

காக்கையை மூதேவிகொடியாகப் பிடித்திருக்கின்றனள்! இது மூக்தாளுக்குக் காகைக் கொடியாள், காகதுவசத்தாள் என வந்த அபிதானங்களால் விளங்கும். அன்றியும் செய்யுள்:

"ஏற்றுக்கொடியார்........................இனியிக் குவலயத்தே, தோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே." கொடி - காக்கை. கேதனம் - கொடி. மாது - மூதேவி. (மறைசை, ௩௧) என வரும்.

காக்கைகளின் இரண்டு கண்களுக்கும் மணி ஒன்றுதான் கலந்து விளங்கும்; அதனாலேதான் ஒன்றைப் பார்க்கும்போதெல்லாம் தலையைச் சாய்த்துப்பார்ப்பதை நாம் நேரிற் பார்க்கின்றோம்.

செய்யுள்: "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர், ஆகத்து ளோருயிர் கண்டனம்" (திருக்கோவையார், ௭௧) என வரும்.

காக்கைகளின் இரண்டு கண்களுக்கும் மணி ஒன்று வந்த வரலாறு ஒன்று இங்ஙனம் வரைகின்றனன். அதாவது:

சித்ரகூட பர்வதத்தில் ஸ்ரீராமஸ்வாமியும், சீதாபிராட்டியாரும் தனித்திருக்குங்கால் இந்திரன் புத்திரனாகிய சயந்தன் காக உருக்கொண்டு வந்து ஜானகியார் ஆகத்திற் கூரியநகங்களினாற் கீறினன். பிராட்டியார் அதற்காற்றாதவராய்த் தன் பிரிய மனோகரருக்குத் தெரிவித்தனர். சக்கரவர்த்தி திருமகனார் மனம் கன்றி ஒரு புல்லை அஸ்திரமாக உருவியற்றிக் காகத்தின்மீது விட்டனர். அக்காகம் நடுநடுங்கி அயனார், அரனார், அட்டதிக்குப் பாலகர் முதலானோர்களிடம் சென்று சரண்புக, ஆண்டவர்கள் மறுத்தனர். பின்னர்

எங்கும் புகல் இன்மைபால் அந்தக் காகம் மீண்டு சீதாபதியிடமே வந்து அபயம் கூறிற்று. கருணாநிதியாகிய காகுத்தர் மகிழ்ந்து உன் குறை பொறுத்தனம். நம் அஸ்திரத்தால் இருகண் மணியும் இழந்த உனக்கும், உன் இனமாகிய ஏனைய காக்கைகளுக்கும் உள்ள இருகண்களுக்கும் மணி ஒன்றே பெறுகவென்றருளிச் செய்தனர். சயந்தனும் வணங்கிப் பொன்னகரம் புக்கனன்.

இது அடியில் வரும் செய்யுட்களால் நன்கு விளங்கும்:

"நாக மொன்றிய *நல்வரை யின்றலை மேனாள்
ஆகம் வந்தனை வள்ளுகிர் வாளி னளைந்த
காக மொன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய்." (௭௭)

"அங்க தஞ்சி நடுங்கி யயன்பதி யண்மி
இங்கு நின்வர வென்ன வெனக்கனல் வெய்த
மங்கை பங்கனொ டெண்டிசை யுஞ்செல மற்றோர்
தங்கூடங்க ளிடங்கண் மறுத்தமை †தைப்பாய்." (௭௮)

"இந்தி ரன்றரு ‡சைமந்த னுறுந்துயர் யாவும்
அந்த ரத்தினி னின்றவர் கண்டினி யஞ்சா
எந்தை தன்சர ணஞ்சர ணென்றவ னஞ்சி
வந்த வன்சரண் வீழ்கென வுற்றதும் வைப்பாய்." (௭௯)

"ஐய நின்சர ணஞ்சர ணென்றவ னஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளல் மகிழ்ந்தே,
வெய்ய வன்க ணிரண்டொடு போகென விட்ட
தெய்வ வெம்படை யுற்றுள தன்மை தெரிப்பாய்." (௮௦)

"எந்தை நின்சர ணஞ்சர ணென்றவி தன்னால்
முந்து நின்குறை யும்பொறை தந்தன முந்துன்
சந்த மொன்று§கொ டித்திரள் கண்க டமக்கே
வந்தொர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்." (௮௧)

"வேகம் விண்டு சயந்தன் வணங்கி விசும்பில்
போக வண்டர்கள் கண்டலர் கொண்டு பொழிந்தார்
நாக நம்ப னிளங்கிளை நன்குண ராத
பாகு தங்கிய வென்றிபி னின்சொல் பணிப்பாய்." (௮௨)

வைதேகியார் கூற்று (கம்ப. ராமா, சுந்தர, சூளா.)

(இன்னும் வரும்)

T. M. முருகைய வாத்தியார்,
தலைமை B. E. ஸ்கூல், செங்கிபட்டி, தஞ்சாவூர் தாலூகா.

* நல்வரை - நல்ல சித்ரகூடம். † தைப்பாய் - தெரியச்சொல்லு.
‡ சைமிந்தன் - சயந்தன். § கொடித்திரள் - காக்கைக் கூட்டம்.

புத்தகக்குறிப்பு.

சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும், பொழிப்புரை முதலியனவும்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு தூத்துக்குடி வாசியும், திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும், தமிழ் நாட்டிற் பற்பல நகரங்களிலோறுஞ் சென்று சைவசமயப் பிரசங்கமாரிபொழிந்து வருபவருமாகிய ஸ்ரீமத் பொ. முத்தையபிள்ளையவர்கள் எழுதிய பொழிப்புரை முதலியன அடங்கிய புத்தகமொன்று நம் பார்வைக்கு வரப்பெற்றோம். ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவாக்காகிய சிவஞான சித்தியார் நூற்பெருமையை உணராத சைவசமயிகளிரார். "பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, யோர்விருத்தப் பாதிபோதும்" என்பதும், "பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை, சாதித்தார் பொன்னடியைச் சாருநா ளெந்நாளோ" என்பதும், "வள்ளுவர்நூ லன்பர் திருவாசகந்தொல் காப்பியமே, தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—யொள்ளி யவாந், தொண்டர் புராணந் தொகுசித்தி யாராறுந், தண்டமிழின் மேலாந் தரம்" என்பதும் இந்நூற் பெருமையை நன்குணர்த்துவனவாம்.

இங்ஙனம் ஆன்றோர்களாற் பாராட்டப்பெற்ற இந்நூற்கு ஆறு உரைகள் முன்னரேயுண்டு. அவ்வுரைகளனைத்தையும் நன்காராய்ந்து திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகளுரையையும், திருவாவடுதுறை ஆதீனகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகளுரையையும் நன்கு தழுவி எல்லார்க்கும் இனிது விளங்கும்படி தெளிவான செஞ்சொற்றொடர் கொண்டு பிள்ளையவர்கள் எழுதியிருக்கும் இப்பொழிப்புரை சைவசமயிகட்குப் பேருபகாரம் புரிவதொன்றேயாம். ஒவ்வொரு செய்யுட்கு முன்னரும் அச்செய்யுட் கருத்தும்பொருளைத் தெரித்துக் காட்டும் வசனங்கள் சேர்த்திருத்தல் கற்பார்க்குப் பெரும்பயன் செய்யும். அங்ஙனமே செய்யுட்களின் அடியில் "கொண்டுகூட்டு" என்னும் அந்துவயவிளக்கம் சேர்த்திருத்தலும் பெரிதும் உபயோகமாகும். ஏனைச்சைவசித்தாந்த நூல்களிற் காணப்படும் விஷயங்கள்பல இதன் விசேடவுரையின்கண் விளக்கிக் காட்டப் பட்டுள்ளன. இந்நூலின் முன்னையுரைகளில் சுருக்கமாகக் காட்டப்பட்ட சில அரிய விஷயங்கள் இவ்வுரையின்கண் விளக்கமாக வரையப்பெற்றுள்ளன. இவ்வுரையை ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகட்கு உரிமைப்படுத்தியிருப்பதால் பிள்ளையவர்கட்குச் சுவாமிகள்மாட்டுள்ள பேரன்பின்றிறம் நன்கு புலப்படும். நூலாசிரியர் சரித்திரம், அவதாரிகையின் அகராதி, விசேடவுரையிற்கண்ட விஷய அகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி ஆகிய இவைகள் இதனுட் சேர்த்திருத்தல் பெரும் பயனுடைத்தேயாம். சைவசித்தாந்த ஆராய்ச்சியை விரும்பும் நம்மவர் யாவரும் இவ்வுரைப் புத்தகத்தைப் பெற்றுக்கற்றல் நன்றென்பது எமது கருத்து. இதன்விலை ரூபா ஒன்றரைதான். வேண்டுவோர் மதுரைபுதுமண்டபம் புஸ்தக வியாபாரி இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரிடமும், தூத்துக்குடியில் மேற்குறித்தபிள்ளையவர்களிடமும் சென்னை தம்பு செட்டிவீதியில் ரிப்பன்பிரசிலும் விலைகொடுத்துப்பெறலாம்.

பத்திராதிபர்.

மதுரையில் நாளிது ஆனந்தவருஷம் நிகழ்ந்த
ஆவணிமூல மஹோற்சவத்தின்

தமிழ்வேத பாராயணச் சிறப்பு.

சிவாலயங்கள் பலவற்றுள்ளும் திருவாலவாய் க்ஷேத்திரமே சிறந்தது என்பதை

"திருவால வாய்க்கிணையா மொருதலமுந் தெய்வமணஞ் செய்யப்பூத்த
மருவார்பொற் கமலநீர் தீர்த்தமுமத் தீர்த்தத்தின் மருங்கிலூன
உருவாகி யுறைசோம சுந்தரன்போல் இகபரந்தந் தலைவாவீடு
தருவானு முப்புவனத் தினுமில்லை யுண்மையிது சாற்றின்மன்னோ"

என்னும் பரஞ்சோதி மாமுனிவரது திருவாக்கால் யாவரும் அறிவார்கள்.

இத்தகைய திவ்யக்ஷேத்திரத்தில் மாசந்தோறும் உற்சவங்கள் நிகழ்கின்றன. அம்பாள் திருக்குமாரர் பரிவாரங்கள் சகிதம் சுவாமி வீதிகளுக்கெழுந்தருளும் போதெல்லாம் வேதபாராயணம் நடைபெறவேண்டுவது ஆவசியகமென்பதையும், நம்பெருமானுக்கு மிகவும் உகந்தது தமிழ்வேதபாராயணமே என்பதையும் யாவரும் ஒத்துக் கொள்வார்கள். அப்படியானால் மதுரைமாநகரில் தமிழ்வேத பாடசாலை ஒன்றாவது இருத்தல் இன்றியமையாததாம். தற்காலம்வரை தமிழ்வேத பாடசாலையில்லாததினால் முக்கியமாகிய சித்திரை, ஆவணி உற்சவங்களுக்கு மாத்திரம் பிறஇடங்களிலிருந்து தமிழ்வேதம் பாடவல்லவர்களைத் தருவித்து நடத்திவந்த வழக்கம் சென்ற சித்திரைமாசத்தில் நின்றுவிட்டதுபற்றிக் கவலாத அன்பருமுண்டோ?

ஆகையால் ஆவணிஉற்சவத்தைத் தமிழ்வேதபாராயணத்தால் சிறப்பிக்க வேண்டுமென்று மதுரை ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள் மடாலயம் மஹாசந்நிதானம் அவர்கள் கொண்ட கருத்திற்கிணங்க மேற்படி மடாலயம் ஓதுவாரும் தமிழ்வேதத்தைப் பண்ணுடன் ஓதவல்லாரும் தமிழ்வேதத்துக்குப் பிடில்வாத்தியம் வாசிக்கக் கூடியவருமாகிய ஸ்ரீசிதம்பர ஓதுவாமூர்த்திகளுடன் சிவநேயச் செல்வர்களிடம் சென்று திரவிய சகாயம் பெற்றதில் மதுரை ஆதீனவித்வான் ஜேயிண்ட் மேரி ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமத் மு. கோவிந்தசாமி ஐயர் அவர்களும், மருந்துஷாப் மகா-ள-ள-ஸ்ரீ

ஆறுமுகம் பிள்ளையவர்களும், மேலமாசிவீதி ஸ்ரீகுமரன் திருவருட்சங்கம் மகா-ள-ள-ஸ்ரீ முருகப்பபிள்ளையவர்களும், மகா-ள-ள-ஸ்ரீ பிரமநாயகம்பிள்ளையவர்களும்வடக்குச்சித்திரைவீதி மகா-ள-ள-ஸ்ரீ சண்முகவேலாயுதப் பெருமாள்பிள்ளையவர்களும் முன்னின்று எம்முடன் ஒத்துழைத்து உபகாரஞ்செய்தார்கள். அன்பிற்சிறந்த தனதனவான்கள் பலரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து ஆதரித்ததினால் மேற்படி உற்சவமானது தமிழ்வேதபாராயணத்தாற் சிறப்புற்றது.

பூக்கடை மகா-ள-ள-ஸ்ரீ திருவேங்கடம் பிள்ளையவர்கள் தம் சொந்தக் கைங்கரியமாகப பூமாலைகள் கொடுத்து மிக்கசிரத்தையுடன் உபசரித்தார்கள்.

இம்மகோபகாரிகட்கு எல்லாநலன்களையும் தந்தருளும் வண்ணம் திருவுரவ்வாயுடையார் திருவடிமலர்களைத் துதிக்கின்றோம்.

மேலேகண்டவிதமாய் அன்பர்களுடைய சகாயம் கிடைக்குமானால் பின்வரும் உற்சவங்களையும், சிறப்பிக்கலாமென்பது எமது விருப்பம். அவ்வாறே நிறைவேறும் வண்ணம் இறைவன்றிருவருள்புரிக.

வாழ்த்து.

ஆலவாய்ப்பரமன் ஆவணி விழாவில் அம்மையோ டைங்கான் முருகன்
சீலமார் பரிவா ரங்களி னுடனே திருவுலாப் போந்தருள் வேலை
ஞாலமார் பெரியோர் புகழ்தமிழ் வேதம் நடைபெறச் செய்சிவநேயர்
சாலவே ழேழ் வாழ்வுற வன்னோன் தாண்மலர் தொழுதுவாழ்த் திடுவோம்.

வரவு விவரம்.

	ரூ. அ. பை.
திருஞானசம்பந்தசுவாமிகள் மடாலயம் மஹாசந்நிதானம் அவர்கள் மதுரை	30—0—0
ஸ்ரீமாந்-முற்றையூர் பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்கள்	15—0—0
,, சோழவந்தான் வித்துவான் அ. சண்முகம்பிள்ளையவர்கள்	10—0—0
,, மதுரை விவேகபாநுப்பிரஸ் மு.ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள்	5—0—0
,, பலவான்குடி கு. வெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள்	5—0—0
,, மதுரை மேலமாசிவீதி ஸ்ரீகுமரன் திருவருட்சங்கத்தார்	5—0—0
,, கோட்டையூர் பெ. க. அ. சித. அவர்கள்	3—0—0

	ரூ. அ. பை.
ஸ்ரீ ழுர்க் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள்	3—0—0
,, சின்னமனூர் கு. அண்ணாமலைப்பிள்ளையவர்கள்	3—0—0
,, அரியக்குடி சா: கி. ரெ. இலக்ஷுமணச் செட்டியாரவர்கள்	2—0—0
,, மெ. ராம. வெ வ	2—0—0
,, கி. மு	2—0—0
,, கா. வயி. கா	2—0—0
,, முத்து. கரு. வெ	2—0—0
,, ராம. ப. வ மு	2—0—0
,, பள. அ. அரு சு	2—0—0
,, என். சுந்தரலிங்கசாமி அவர்கள் (சாப்டூர் ஜமீந்தார்)	2—0—0
,, சப்ரிஜிஸ்தரார் நெல்லையப்ப பிள்ளையவர்கள்	2—0—0
,, ஜவுளிக்கடை சு. கி. இராமசாமி பிள்ளையவர்கள்	2—0—0
,, வக்கீல் V. மாணிக்கம் பிள்ளையவர்கள்	2—0—0
,, நியூ செக்கின் கம்பெனியாரவர்கள்	2—0—0
,, பெ. சா. ந. ப ந. அன்ஸன்ஸ்அவர்கள்	2—0—0
,, ஜி. எஸ். ஜெகபதி நாயுடுஅவர்கள்	2—0—0
,, வக்கீல் ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள்	2—0—0
,, எண்ணெய் மண்டி சு காந்திமதிநாத பிள்ளை அவர்கள்	2—0—0
,, நெல்மண்டி சு. சர்க்கரையப்ப பிள்ளையவர்கள் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்	2—0—0
,, சிதம்பரம்தாலூகா உடையூர் முத்துக்குமாரசாமிபிள்ளையவர்கள்	2—0—0
,, பள்ளத்தூர் உ. அ. உ. அ. அவர்கள்	1—0—0
,, முறையூர் அரு. கரு. கருப்பன் செட்டியாரவர்கள்	1—0—0
,, கொறட்டி சொக்கலிங்கம் செட்டியாரவர்கள்	1—0—0
,, பள சு. அரு. அ	1—0—0
,, கரு. வெ. அள	1—0—0
,, கி. பள	1—0—0
,, பழ. காக. மீ	1—0—0
,, கூ. கரு. கா	1—0—0
,, கரு. வெமி	1—0—0
,, ஆ. மு.	1—0—0
,, உ. அ. மு. ராம. அ	1—0—0
,, உ. ராம. உ. மு. சுப	1—0—0
,, வீர. சு. அ.	1—0—0
,, மெ. ராம. அ	1—0—0

	ரூ. அ. பை
,, வ. ராம.-கு. ராம	1—0—0
,, முரு. பழ. கண	1—0—0
,, கொ. மு	1—0—0
,, அள. சு. பால்சாமி ஐயரவர்கள் ...	1—0—0
,, K. N. சேஷய்பாகவதர் அவர்கள் அன்கோ	1—0—0
,, K. S. ரெங்காச்சாரியாரவர்கள் அன்ஸன்ஸ்	1—0—0
,, சா. கி. முத்துசெட்டியாரவர்கள்	1—0—0
,, பு. நா. ரெங்கய்யரவர்கள்	1—0—0
,, மருந்துஷாப் டி. என். சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள்	1—0—0
,, எண்ணெய்மண்டி M. S. சண்முகமுதலியாரவர்கள்	1—0—0
,, எஸ். கோபால் பிள்ளையவர்கள்	1—0—0
,, P. M. சண்முகம் செட்டியாரவர்கள்	1—0—0
,, ஆ. ச. கிருஷ்ணன் செட்டியாரவர்கள்	1—0—0
,, வெ. வீ. அ. ரு. அவர்கள்	1—0—0
,, ஆ. சுப்பன் செட்டியாரவர்கள் ...	1—0—0
,, பெ. சித. பெருமாள் செட்டியாரவர்கள்	1—0—0
,, ஷாப் செ. சு. கோவிந்தசாமிசெட்டியார் அன்பிரதர்ஸ் அவர்கள்	1—0—0
,, தாமஸ் அன்கோ P. கந்தசாமி பிள்ளையவர்கள் ...	1—0—0
,, டாக்டர் K. சுப்பிரமணியபிள்ளையவர்கள் ...	1—0—0
,, ப. சி. முத்துசெட்டியாரவர்கள்	1—0—0
,, அ. சுடலைமுத்துப்பிள்ளையவர்கள்	1—0—0
,, மளிகை சி. சண்முகவேலாயுதம் பிள்ளையவர்கள் ...	1—0—0
,, ம. கோ. சோமசுந்தரமுதலியார் அவர்கள் ...	1—0—0
,, மாணிக்கா ராம. சங்கரநாராயணய்யர் அவர்கள் ...	1—0—0
,, பூ. மு பூவுலிங்கம்பிள்ளையவர்கள்	1—0—0
,, வக்கீல் எல். கே. துளசிராம் அவர்கள்	1—0—0
,, மிட்டாய்க்கடை ஸ்ரீமத் இராமகிருஷ்ண ஐயரவர்கள் ...	1—0—0
,, T. A. முத்துகருப்பபிள்ளையவர்கள் ... ... இந்து அண்டு சுதேசமித்திரன் ஏஜண்டு	1—0—0
,, இராமநாதபுரம் முத்திருளப்ப பிள்ளையவர்கள் ...	1—0—0
,, கோரிப்பாளையம் வ. மு. இராமசாமி பிள்ளையவர்கள் ...	1—0—0
,, மேலமாசிவீதி முத்தாசாரியாரவர்கள்	1—0—0
,, வக்கீல் கல்கத்தா இராமசந்திர ஐயர் அவர்கள் ...	1—0—0
,, எண்ணெய்மண்டி க. வீர. மலையாளத்தான் செட்டியாரவர்கள்	1—0—0
,, விபூதிக்கடை கோ. சுப்பையா செட்டியாரவர்கள் ...	1—0—0

		ரூ. அ. பை.
,,	செ. ராம. கனகசபாபதி செட்டியாரவர்கள் ...	1—0—0
,,	சாயநூல் வியாபாரம் சோ. வெ. சிவராமையரவர்கள் ...	1—0—0
,,	கமிஷன் ஏஜண்டு சி. அ. குப்புசாமி செட்டியாரவர்கள்	1—0—0
,,	கண்டிராக்டர் கோவிந்தராவ் அவர்கள் ...	1—0—0
,,	சைக்கிள்ஷாப் R. இராமசாமிநாயுடு அவர்கள்	1—0—0
,,	தெற்குமாசிவீதி சொ. நாகப்பசெட்டியார் அவர்கள் ...	1—0—0
,,	ம. ப இராகவநாடார்	1—0—0
,,	அள ராம நா	0—8—0
,,	வ. பெரி. வ. நா	0—8—0
,,	வ. பெரி. வ. ராம	0—8—0
,,	வ. வெ. மு	0—8—0
,,	வ. அள. வ	0—8—0
,,	வ. ராம. கு. முத்து	0—8—0
,,	சு. மு. பழ	0—8—0
,,	கரு. பெரி. உ.	0—8—0
,,	பழ. ராம. சா	0—8—0
,,	இரும்புக்கடை சீ. சு. பா. குப்புசாமிஐயர் அன்பிரதர்ஸ்அவர்கள்	0—8—0
,,	காசுக்கடை சீ. கு. சு. அவர்கள்	0—8—0
,,	தூமாட்டி ரெங்கசாமி ஐயர் அன்சன்ஸ் அவர்கள்	0—8—0
,,	முருகவிலாஸ் சைக்கிள் கம்பெனியாரவர்கள் ...	0—8—0
,,	புக்ஷாப் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனூரவர்கள்	0—8—0
,,	சப்ரிஜிஸ்தர் சுப்பிரமணியபிள்ளையவர்கள் ...	0—8—0
,,	காசுக்கடை பா. க. அருணாசலஞ்செட்டியாரவர்கள் ...	0—8—0
,,	டி. ஐயம்பெருமாள் பிள்ளையவர்கள்	0—8—0
,,	புக்ஷாப். பி. நா. சி. ஏஜண்டு மு. கிருஷ்ணபிள்ளையவர்கள்	0—8—0
,,	புக்ஷாப், இராம. குருசாமிக்கோனூரவர்கள் ...	0—8—0
,,	கீழாவணிமூலவீதி சுவாமிநாதையரவர்கள் ...	0—8—0
,,	காசுக்கடை க. சு. இராமசாமி செட்டியார் அவர்கள் ...	0—8—0
,,	எல். என். எஸ். இராமசாமி ஐயர் லெக்ஷுமணையர் அவர்கள்	0—8—0
,,	கணப்பு ஆ. முத்துசாமிபிள்ளையவர்கள் ...	0—8—0
,,	முனிசிபல் கவுன்சில் M. பரமேசுவரன் பிள்ளையவர்கள்	0—8—0
,,	வக்கீல்குமாஸ்தா கந்தசாமிபிள்ளையவர்கள்	0—8—0
,,	ரொட்டிக்கடை இராமசாமிபிள்ளையவர்கள்	0—8—0
,,	செட்டிஷாப் A. சின்னச்சாமி நாயுடுஅவர்கள்	0—8—0
,,	மிட்டாய்க்கடை நாகப்பட்டணம் விஸ்வநாதஐயரவர்கள்	0—8—0

	ரூ. அ. பை.
,, மண்டி பூ. மு அ கா. ரெங்கயன்செட்டியாரவர்கள்	0—8—0
,, ஷை டீ. வரதராஜலு செட்டியாரவர்கள்	0—8—0
,, அடகு வியாபாரம் அ. முத்தையன் செட்டியாரவர்கள்	0—8—0
,, எண்ணெய்மண்டி பு ம. நல்லகுட்டி செட்டியாரவர்கள்	0—8—0
,, வக்கீல் ஆர். எஸ். நாராயணசாமி ஐயரவர்கள்	0—8—0
,, பா தெ. மு. கோவிந்தராயுலு ஐயரவர்கள்	0—8—0
,, மேலக்கோபுரவாசல் ஷாப் ஜி. கிருஷ்ணையரவர்கள்	0—8—0
,, வக்கீல் குமாஸ்தா சிதம்பரதாண்டவ முதலியாரவர்கள்	0—8—0
,, மாம்பழக்கடை சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்	0—8—0
,, வழங்கானத்தம் சீதாராமய்யாவர்கள்	0—8—0
,, மேங்காட்டுத்தெரு சங்கரய்யரவர்கள்	0—8—0
,, கொத்தனூர் அப்பாவுபிள்ளையவர்கள்	0—8—0
,, வக்கீல் V. சுந்தரமையரவர்கள்	0—8—0
,, கமிஷன் ஏஜண்டு சி. கொ பத்திரகாளிமூப்பனாரவர்கள்	0—8—0
,, அனுப்பானடி ரூ. பெ. தி. பெருமான் பிள்ளையவர்கள்	0—8—0
,, தி. அ. பால்வண்ணஞ் செட்டியாரவர்கள்	0—8—0
,, N. வெங்கட்டராமநாயுடு சீனிவாசலுநாயுடு அவர்கள்	0—8—0
,, மேலமாசிவீதி அ. மாணிக்கம்பிள்ளையவர்கள்	0—8—0
,, K. V. இராமாச்சாரியார் அவர்கள்	0—8—0
ஆகவரவுரூ.	194—8—0

செலவு விவரம்.

திருவாரூருக்கு சிதம்பரஓதுவார் போய்வர	5—0—0
தமிழ்வேத பாடகர் இனம் 5க்கு சன்மானம்	70—0—0
ஷை ரெயில்ஜார்ஜ் வண்டிச்செலவு	21—4—0
மிருதங்கம் பிட்டில் தம்பூர்பெட்டிவகையரா ஈக்கவாத்தியங்களுக்கு	34—6—0
கியாஸ் லயிட்டு	6—8—0
பூமாலை மெழுகுவர்த்தி சுவரொட்டி வகையரா சில்லரை ...	8—14—0
தவசிப்பிள்ளை சம்பளம்பால் வகையராவுடன் போஜனச்செலவு	43—8—0
நோட்டீஸ் செலவு	8—0—0
	194—8—0

ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயம் மஹா சந்நிதானமவர்கள் உத்தரவின்படி மேலேகண்ட சிதம்பர ஓதுவாமூர்த்தியவர்கள் ஆவணிமீ முதல் நம் சைவசமயச் சிறார்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவாரத்தைப் பண்ணுடன் பயிற்றி வருகின்றனர்.

ஆகையால் அன்பர்கள் யாவரும் தங்கள் குழந்தைகளையும் இஷ்டர்களுடைய குழந்தைகளையும் ஒவ்வொரு நாளும் இரவு 7 மணிக்கு ஷை திருஞானசம்பந்தசுவாமிகள் மடாலயத்துக்கு அனுப்பி தேவாரத்தை விருத்தி செய்யும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். தற்காலம் பத்துப்பிள்ளைகள் வரை பாடங் கேட்டு வருகின்றனர். மதுரையில் சுமார் 50 குழந்தைகளாவது தேவாரமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதிவரும்படி நம் ஆலவாய்ப் பெருமான் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்,

அ. முத்துச்சாமி பிள்ளை,

மானேஜர்,

விவேகபாநுப் பிரஸ், மதுரை.

சமாசாரக் கொத்து.

ஒரு பிரேத அறை விசேஷம்:—இத்தாலிய தேசத்தின் தெற்குப் பகுதியிலுள்ள பிரேத அறைகளுள் ஒன்று 3000 வருஷங்களுக்கு முற்பட்டதாம். அதில் வைக்கப்பட்டிருக்கும் செயற்கைப் பூக்கள் முதலியன சிறிதும் சேதமடையா திருக்கின்றனவாம்.

ஒரு சிறுவனது பெருஞ் சம்பாத்தியம்:—பிரான்சு தேசத்திலுள்ள ஓர் உயர்தரப்படக்காட்சிக் கம்பெனியில் வேலைசெய்து வந்த தேபாஸ் என்னும் 7 வயதுள்ள ஒரு சிறுவன் ஒரு வருஷத்தில் 4000 பவுண்டு சம்பாதித்தானாம்.

கம்பியில்லா டெலிபோன்:—கம்பியில்லாத தந்தியைக் கண்டுபிடித்த மார்க்கோனி யென்னும் இத்தாலியர் இப்போது கம்பியில்லா டெலிபோனைக் கண்டு பிடித்து அங்கு அதனை உபயோகத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்.

வண்டிகளால் நேர்ந்த உயிர்ச்சேதங்கள்:—யுனைடெட் கிங்டமென்று கூறப்படும் இங்கிலாந்து, அயர்லாந்து தேசங்களில் சென்ற 1913-ம் வருஷத்தில் வண்டிகளால் நேர்ந்த விபத்துக்களால் இறந்தவர்களின் தொகை 41,748 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.